
# The Bible Standard

## (தமிழ் வெளியீடு)



"உமது வெளிச்சத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்.

அவைகள் என்னை நடத்தும்." சங். 43:3

**"LIFT UP A STANDARD FOR THE PEOPLE"**
**Isaiah 62 : 10**

**Translated from BS 421**

**பொருளடக்கம்**


மரித்தோரின் உயிர்த்தெழுதலே நமது ஒரே நம்பிக்கை ................ 2

மனிதனின் நித்திய முடிவு .......................... 8

எது சத்தியம் .......................................... 10



BS Tamil Version - 19

2013

# மரித்தோரின் உயிர்த்தெழுதலே, நமது ஒரே நம்பிக்கை

**"மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லை ........... கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களும் கெட்டிருப்பார்களே"** (அழிந்திருப்பார்களே -perished). **(1 கொரி. 15 : 13–18).**




கிறிஸ்துவின் மரணம் மற்றும் அந்த மரணத்திலிருந்து அவர் அடைந்த மகத்தான உயிர்த்தெழுதல் ஆகியவைகளின் வருடாந்திர விழா ஒரு கிறிஸ்தவனின் இருதயத்தில், தேவ அன்பின் சொல்லி முடியாத ஈவைக் குறித்தும் (யோவா. 3 : 14-17; 2 கொரி. 9 : 15), நம் மீட்பின் கிரயமாக கிறிஸ்துவின் மரணம் குறித்தும் (1 தீமோ. 2 : 6) உயிர்த்தெழுதலில் மரணத்தின் மீது அவர் அடைந்த மகத்தான வெற்றியைக் குறித்தும் அதின் காரணமாக நாம் மரித்தோரிலிருந்து அடையும் உயிர்த்தெழுதலைக் குறித்தும் நித்திய ஜீவனைக் குறித்தும், மிக ஆர்வமாக அறிந்து கொள்ளுமாறு செய்கிறது. "மரித்தோருடைய உயிர்த்தெழுதலைப் பற்றிய நம்பிக்கையைக்" குறித்தும் "தேவனுடைய ஈவாகிய நித்திய ஜீவனைக் குறித்தும்" (அப். 23 : 6; 24 : 15; ரோம. 6 : 23) நாம் சரியாக அறிந்து கொள்ள வேண்டுமானால் மரணத்தைக் குறித்த உண்மை நிலையை, அதாவது அது "பாவத்தின் சம்பளமாகிய" பாவத்தின் தண்டனை என்பதையும் அது உயிரினின்றும் பிரிந்துவிடுதல் என்பதையும், "**கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக் கொடுக்கப்பட்டும், நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார்,**" (ரோம. 4 : 25) என்பதையும் நாம் சரியாக அறிந்து கொள்ள வேண்டும்.

மரணம் என்பது ஒரு மாயையே தவிர ஒரு உண்மை நிலை அல்ல என்றும், மரணத்தில் ஜனங்கள் இறந்துபோகிற தாகக் காணப்படுகிறார்களே தவிர, உண்மையில் சாகிறதில்லை என்றும், அவர்கள் ஒரு உயர்ந்த நிலையில் ஜீவிப்பதற்கான மாறுதலை மாத்திரமே அடைகிறார்கள் என்றும், ஆகவே மரணம் என்பது இல்லை என்றும், ஜீவிப்பதிலிருந்து அற்றுப் போகிறதில்லை என்றும் நம்புமாறு கிறிஸ்தவர்களில் அநேகர் போதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

அவ்வித கருத்து படைத்தோர் எவரும், "மரித்தோருடைய உயிர்த்தெழுதலில்" உறுதியாக நம்பிக்கை கொள்ள முடியாது. ஏனெனில் யாரும் உண்மையாகவே சாகாதிருக்கும் போது உயிர்த்தெழுதல் எவ்வாறு நடைபெற முடியும்? அவர்கள் இறந்து போனதாக காணப்படுவதற்கு முன்னிருந்ததைவிட அதிக அளவு உயிர் அடைந்திருப்பார்களேயாகில், "**மரித்தோரின் உயிர்த்தெழுதல்**" குறித்த நம்பிக்கை கொண்டிருப்பதில் எவ்வித அர்த்தம் இருக்க முடியும்? (மரித்தோரின் உயிர்த்தெழுதல் என்ற எங்கள் பத்திரிக்கையைப் பார்க்கவும், கேட்பவருக்கு ஒரு பிரதி இலவசமாக கொடுக்கப்படும்).

முரண்பட்ட கொள்கைகள் பலவும், கொடிய யூகங்களும், கற்பனையிலான மாயங்களும் நமது நாளில் நிலைத்திருப்பதின் காரணமாக, உண்மையான ஜனங்கள் பலர், சத்தியத்திற்கான தங்களது வர்ணனையில் எங்கே போவது என்று தெரியாமல் திகைப்படைந்திருக்கின்றனர். "**பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும், பிசாசுகளின் உபதேசங் களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தை விட்டு விலகிப்போவார் கள்**" (1 தீமோ. 4 : 1) என்றும் "**அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல்........ சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்துபோகுங்காலம் வரும்**" (2 தீமோ. 4 : 3, 4) என்றும் தீர்க்கதரிசனமாகச் சொல்லப்படவில்லையா?

நாம் உண்மையில் சத்தியத்தைக் கற்று அறிந்து, இவ்விதமாக இருண்ட யுகங்களின் பாரம்பரியங்களிலிருந்தும் கட்டுக்கதைகளிலிருந்தும் கொடிய ஏமாற்றங்களிலிருந்தும் (யோவா. 8 : 32, 36; 2 தெச. 2 : 9-13) விடுதலையடைய வேண்டுமானால் தேவனுடைய சொந்த வெளிப்படுத்தலின் வார்த்தைகளாகிய சத்திய வேதாகமம் மட்டுமே நமக்கு ஒரு பத்திரமான வழிகாட்டியாக இருக்க வேண்டும்.

**COURTESY BY :**

THE BIBLE STANDARD -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor**, Ralph M. Herzig. Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates**: **One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** *www.biblestandard.com*

முதலாவது, மரணம் என்பது ஆதாமின் பாவம் காரணமாக ஏற்பட்டது என்பதை நாம் கவனிக்க வேண்டும். "**அதை நீ புசிக்கும் நாளிலே சாகவே சாவாய்**" (ஆதி. 2 : 17) என்று தகப்பனாகிய ஆதாமுக்கு தேவன் சொன்னார். நமக்கு இருக்கிற சாகின்ற உயிரை ஜீவனை நாம் அவனிடத்திலிருந்தே சுதந்தரித்துக் கொள்ளுகிறோம். "**இப்படியாக, ஒரே மனுஷ னாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது போலவும், எல்லா மனுஷரும் பாவஞ் செய்தபடியால் மரணம் எல்லாருக்கும் வந்தது போலவும் இதுவுமாயிற்று ......... ஒருவனுடைய மீறுதலினாலே அநேகர் மரித்திருக்க.......... ஒருவனுடைய மீறுதலினாலே, அந்த ஒருவன் மூலமாய் மரணம் ஆண்டு கொண்டது ....**. (ரோம. 5 : 12, 15, 17). "**அவைகளின் (பாவமான காரியங்களின்) முடிவு மரணமும்...... பாவத்தின் சம்பளம் மரணம்**" (ரோம. 6 : 21, 23). "**மனுஷனால் பாவம் உண்டானது ......... ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறார்கள் ....... மரணத்தின் கூர் பாவம்.**" (1 கொரி. 15 21, 22, 56) "**பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும்.**" (யாக். 1 : 15).

ஏதோ ஒரு விதத்தில் மரணம் என்பது வாழ்க்கையின் ஒரு தொடர்ச்சியாகும் என்று எண்ணுவது தவறானது. அகராதி யில் மரணம் என்பதற்கு, "*உயிரின் பிரிவு, ஜீவிக்கிறதிலிருந்து ஓய்ந்த நிலை*" என சரியாக விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மரித்தவர்கள் உண்மையில் மரித்தவர்களே. தேவன் சொன்னதற்கு நேர் மாறாக "**நீங்கள் சாகவே சாவதில்லை**" (ஆதி. 3 : 4) என்று சாத்தான் கூறினான். ஆத்துமா அழியாதது என்ற கொள்கையின் மூலமாக அவன் தனது பொய்யை இன்னமும் பிரசாரம் செய்து அதனை பலரும் அறியுமாறு செய்து வருகிறான். **சத்தியம் அவனிடத்தில் இல்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலைநிற்கவில்லை. அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய் பேசும் போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான்**, (யோவா. 8 : 44) என்று இயேசுவும் சாத்தானைக் குறித்துச் சொன்னார்.

மரித்தவர்களுக்கு உணர்ச்சி எதுவுமில்லை என்று சத்தியவேதம் தெளிவாகப் போதிக்கிறது. "**மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்.**"(பிர. 9 : 5, 6, 10). "**அவனுடைய ஆவி பிரியும். அவன் தன் மண்ணுக்குத் திரும்புவான், அந்த நாளிலே அவன் யோச னைகள் அழிந்துபோம்.**" (சங். 146 : 4) "**அவன் பிள்ளைகள் கனமடைந்தாலும் அவன் உணரான்; அவர்கள் சிறுமைப் பட்டாலும் அவர்களைக் கவனியான்.**" (யோபு 14 : 21) "**மரணத் தில் உம்மை நினைவு கூர்வதில்லை, பாதாளத்தில் உம்மைத் துதிப்பவன் யார்?**" (சங். 6 : 5). "**மரித்தவர்களும் மவுனத்தில் இறங்குகிற அனைவரும் கர்த்தரைத் துதியார்கள்**" (சங். 115 : 17). "**பாதாளம் உம்மைத் துதியாது, மரணம் உம்மைப் போற்றாது; குழியில் இறங்குகிறவர்கள் உம்முடைய சத்தியத்தைத் தியானிப்பதில்லை. நான் இன்று செய்கிறது போல, உயிரோடிருக்கிறவன், உயிரோடிருக்கிறவனே உம்மைத் துதிப்பான்.**" (ஏசா. 38 : 18, 19).

இயற்கையான நல்ல தூக்கத்தில் உணர்வுகள் எல்லாம் மறந்து போகும் நிலை ஏற்படும். அது போலவே, மரணமாகிய அடையாளமான தூக்கத்திலும் உண்டாகும். வருங்காலத்தில் உயிரோடெழுப்பப்படுவார்கள் என்பதின் காரணமாகவே, ஆதாமின் மூலம் ஏற்பட்ட மரணமானது, **நித்திரை, தூக்கம்** என்றழைக்கப்படுகிறது. இதற்கு ஆதாரமாக பின்வரும் வேத வாக்கியங்களைப் பாருங்கள். "**கர்த்தர் மோசேயை நோக்கி, இதோ, நீ மரிக்குங்காலம் சமீபித்திருக்கிறது. நீ உன் பிதாக்களோடே படுத்துக் கொள்ளப் போகிறாய்**" (உபா. 31 : 14, 16) "**தாவீது தன் பிதாக்களோடே நித்திரையடைந்தான்,**" (1 இராஜா. 2 : 10) "**தாவீது ........ நித்திரையடைந்து, தன் பிதாக்களிடத்திலே சேர்க்கப்பட்டான்**" (அப். 13 : 36). "**சாலோமோன் தன் பிதாக்களோடே நித்திரையடைந் தான்.**" 1 ராஜா. 11 : 43; 2 நாளா. 9 : 31). "**பிதாக்கள் நித்திரை யடைந்த பின்பு**" (2 பேது. 3 : 4). லாசரு மரித்தபோது இயேசு "**அவர்களை நோக்கி: நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரை அடைந்திருக்கிறான்; நான் அவனை எழுப்பப் போகிறேன் என்றார்... ... இயேசுவானவர் அவனுடைய மரணத்தைக் குறித்து அப்படிச் சொன்னார்.**" (யோவா. 11 : 11, 13). ரத்த சாட்சியாகிய ஸ்தேவான் மரித்தபோது "**அவன் நித்திரையடைந்தான்.**" (அப். 7 : 60). சகோதரர்களைக் குறித்து பரிசுத்த பவுல் "**சிலர் மாத்திரம் நித்திரை அடைந்தார்கள்**" (1 கொரி. 15 : 6) என்றும், "**கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்கள்**" (1 கொரி. 15 : 18) என்றும் கூறுகிறார். பொதுவான உலகத்தாரைக் குறித்து "**இயேசுவுக்குள் நித்திரை அடைந்தவர்கள்**" என்றும் (1 தெச. 4 : 14) எழுதியிருக்கிறார்; மேலும் அவர், இந்த நித்திரையின் நிலை இயேசுவின் இரண்டாவது பிரசன்னமாகுதல் வரைத் தொடர்ந்து இருக்கும் என்றும், அப்பொழுது முதலாம் உயிர்த்தெழுதலில் உயிரோடி ருக்கிற திருச்சபையின் அங்கத்தினர்களும் "**நித்திரை அடைந்தவர் களுக்கு முந்திக் கொள்வதில்லை**" (1 தெச. 4 : 15) என்றும் காண்பிக்கிறார்.

## மனுஷ ஆத்துமாக்கள் சாவாமையுடையவை அல்ல

இயற்கையில் மனித ஆத்துமா சாவாமை உடைய தல்ல. தேவனைத் தவிர்த்து, இயேசு ஒருவர் மாத்திரமே "**சாவாமையுடையவர்**" (1 தீமோ. 6 : 16) என பரிசுத்த வேதாகமம் நமக்குத் தெரிவிக்கிறது. பழைய ஏற்பாட்டில் வருங்காலத்திய நித்திய ஜீவனைக் குறித்த நம்பிக்கை தெளிவில்லாத நிலையில் தரப்பட்டிருக்கிறது. ஆனால் சாவாமை குறித்தோ அங்கு எவ்வித குறிப்பும் இல்லை. இயேசு பிரசன்னமானபோது "**அவர் மரணத்தைப் பரிகரித்து (மரணமாகிய அரக்கனைப் பிடித்து, மனிதனின் மீதிருந்த அவனுடைய பிடியை உடைத்து) ஜீவனையும் (நித்திய பரிபூரண ஜீவன்) அழியாமையையும் (சாவாமையையும்) சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கி னார்.**" (2 தீமோ. 1 : 10). சாவாமை என்ற அழியாமை, வம்ச பாரம்பரியமாகவோ அல்லது வேறு எவ்விதமாகவோ தேவனிடத்திலிருந்து தானாக பெற்றுக் கொள்ளக் கூடியது அல்ல. ஆனால் அது ஆவலுடன், சோர்ந்து போகாமல் தேடுகிறவர்களுக்கு மட்டுமே கிட்டக்கூடியது ஆகும் என சத்திய வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளது. (ரோம. 2 : 6, 7). உயிர்த்தெழுதலில் திருச்சபை "**அழிவுள்ளதாகிய இது அழியா மையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் (மனுஷன் அழிவுள்ளவன் சாவுக்கேதுவானவன், சாவாமை என்பது மரணத்துக்குள்ளாக்க முடியாத நிலைமை. வெளி. 2 : 11) தரித்துக் கொள்ளவேண்டும்**" (1 கொரி. 15 : 53, 54) என்று அப்போஸ்தலன் விளக்குகிறார்.

"**தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணி னாலே உருவாக்கி, ஜீவ சுவாசத்தை** *(எபிரேய பாஷையின்படி அது ஜீவிகளுடைய சுவாசம் என்பதாகும். அது சுவாசிக்கிற எல்லா ஜீவ பிராணிகளுக்கும் பொதுவான சுவாசமாகும்)* **அவன் நாசியிலே ஊதினார்; மனுஷன் ஜீவ ஆத்துமாவானான்,**" (ஆதி. 2 : 7) என்று வேதாகமம் நமக்குத் தெளிவாகக் கூறுகிறது.

தேவன் மனிதனுக்குள் ஒரு ஆத்துமாவை வைக்கவில்லை, ஆனால் மாறாக மனிதன் ஒரு ஜீவ ஆத்துமாவானான் என்பதைக் கவனிக்கவும். ஆத்துமா என்பது ஒரு நபர் – அதாவது ஓர் உணர்வுள்ள ஜீவி (எபிரேய வார்த்தை நேபேஷ் (Nephesh) என்று சத்திய வேதாகமம் தெளிவாக நமக்குக் கூறுகிறது. ஆனபடியால் தான் மனித ஆத்துமா தனக்காக அநேகம் வருடங்களுக்கு அநேகம் பொருள்களை சேர்த்து வைக்கவும், இளைப்பாறவும், புசிக்கவும், குடிக்கவும், பூரிப்பாயிருக்கவும் முடியும் (லூக். 12 : 19); ஆணையிடவும் பிறர் ஆணையிடு வதைக் கேட்கவும் முடியும்; அசுத்தமானவைகளைத் தொடவும், பொய் சொல்லவும், வஞ்சிக்கவும் ஜனத்திலிராதபடி அறுப்புண்டு போகவும் முடியும். (லேவி. 5 : 1-4; 6 : 2-5; 23 : 29, 30.); "**அஞ்சனம் பார்க்கிறவர்களையும், குறிசொல்லுகிறவர்களையும் பின் தொடர்ந்து சோரம் போக எந்த ஆத்துமா அவர்களை நாடுகிறானோ அந்த ஆத்துமாவுக்கு விரோதமாக எதிர்த்து நின்று, அவனைத் தன் ஜனத்திலிராதபடிக்கு அறுப்புண்டு போகப் பண்ணுவேன்**;" (லேவி. 20 : 6)

கீழான நிலைமையில் உள்ள பிராணிகளும் ஆத்து மாக்களே, (எபிரேய வார்த்தை நேபேஷ் – Nepesh) புலனறிவுள்ள சிருஷ்டிதான் என்று சத்திய வேதாகமம் குறிப்பிடுகிறது. உதாரணமாக எண். 31 : 28-ல் "**மேலும் யுத்தத்திற்குப் போன படை வீரரிடத்தில் கர்த்தருக்காக மனிதரிலும், மாடுகளிலும், கழுதை களிலும், ஆடுகளிலும் ஐந்நூற்றிற்கு ஒரு பிராணி வீதம் பகுதி வாங்கி**" என்று கூறப்பட்டிருப்பதில் பிராணி என்ற பதம் மூல பாஷையில் ஆத்துமா என்று அர்த்தங்கொள்ளும் வார்த்தையின் மொழிபெயர்ப்பாகும்.

சரீர மற்றும் மனோ நிலையிலும், சன்மார்க்க மற்றும் மத சம்பந்தமான காரியங்களிலும், மனிதன் தனது உயர்நிலை காரணமாக, ஓர் ஆத்துமாவாக மற்றெல்லா கீழ்நிலைப் பிராணிகளான ஆத்துமாக்களை விட மாறுப்பட்டவன் என்பது உண்மையே. எனினும் அவன் அழிவுக்குள்ளானவனே தவிர, இயல்பாக சாவாமையுடையவன் அல்ல; ஏனெனில், "**மனுபுத்திர ருக்குச் சம்பவிக்கிறது மிருகங்களுக்கும் சம்பவிக்கும். அவர்களுக்கும் இவைகளுக்கும் ஏக சம்பவமுண்டு. இவைகள் சாகிறது போலவே அவர்களும் சாகிறார்கள். ஜீவன்களுக்கெல்லாம் சுவாசம்** (ஜீவ ஆதாரம், ஜீவ சக்தி) **ஒன்றே:** (இந்தக் காரியங்களில்) **மிருகத்தைப் பார்க்கிலும் மனுஷன் மேன்மையுள்ளவன் அல்ல: எல்லாம் மாயையே. எல்லாம் ஒரே இடத்துக்குப் போகிறது. எல்லாம் மண்ணிலே உண்டாகிறது. எல்லாம் மண்ணுக்குத் திரும்புகிறது. மனுஷனுடைய ஆவி உயர ஏறுகிறதா என்றும் மிருகங்களுடைய ஆவி தாழ பூமியில் இறங்குகிறதா என்றும் அறிகிறவன் யார்?** (சாலோமொனுடைய காலத்திலிருந்த புறஜாதியார், மனிதனுக்குள்ளே ஓர் ஆவி ஜீவி உண்டு என்றும் அது அந்த மனிதன் இறந்ததற்குப் பின் உயிர்வாழும் என்று உபதேசித்து வந்தனர்). பிர. 3 : 19-21. (ARV -மொழிபெயர்ப்பு பார்க்கவும்.)

ஆகவே, மனித ஆத்துமா அழியக் கூடியது, அதாவது மரிக்கக் கூடியது, ஆகையால் மரிக்கிறது என நாம் காண்கிறோம். "**அவர்கள் வாலவயதிலே மாண்டு போவார்கள்.**" (யோபு 36 : 14). "**என் ஆத்துமாவை மரணத்துக்கு தப்புவித்தார்.**" (சங். 56 : 13; 116 : 8). "**அவர்கள் ஆத்துமாவை மரணத்துக்கு விலக்கிக் காக்கவில்லை.**" (சங். 78 : 50). "**பாவஞ் செய்கிற ஆத்துமாவே சாகும்.**" (எசே. 18 : 4, 20). அவ்விதமாகவே, மனிதனின் (பாவத்தின் சம்பளமாகிய மரண) கடனை அவனுடைய மீட்கும் பொருளாகத் திரும்பக் கொடுக்கிறதில் இயேசு தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசிப்பார்த் தார். (எபி. 2 : 9). அவர் "**என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது**" (மத். 26 : 38) என்றார். அவரைக் குறித்து, "**அவருடைய ஆத்துமா தன்னைக் குற்ற நிவாரணப் பலியாக ஒப்புக் கொடுக்கும்.....** " என்றும் "**அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றினார்**" என்றும் (ஏசா. 53 : 10, 12) தீர்க்கதரிசனமாகக் கூறப்பட்டிருக்கிறது. (மேலும் அதிக விவரம் வேண்டுவோர் "ஆத்துமா என்றால் என்ன?" என்ற எங்கள் பத்திரிக்கையைப் பார்க்கவும். கேட்போருக்கு பிரதி ஒன்று இலவசமாகக் கொடுக்கப்படும்).

## உயிர்த்தெழுதலில் புதிய சரீரங்கள் கொடுக்கப்படும்

உயிர்த்தெழுதலில் ஒவ்வொரு ஆத்துமாவுக்கும் அல்லது நபருக்கும் ஒரு புதிய சரீரம் கொடுக்கப்படும். "**பூமியின் தூளிலே நித்திரை பண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்திய ஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும், இகழ்ச்சிக்கும், விழித்தெழுந்திருப்பார்கள்.**" (தானி. 12 : 2). "**ஏனென்றால், பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம்வரும்**" (யோவா. 5 : 28). ஆனால் அவர்கள் மரிக்கிறபோது இருந்த சரீரங்களில் திரும்பவரமாட்டார்கள், ஏனெனில், "**நீ விதைக்கும்போது, இனி உண்டாகும் மேனியை விதையாமல், கோதுமை அல்லது மற்றொரு தானியத்தினுடைய வெறும் விதையையே விதைக்கிறாய். அதற்குத் தேவன் தமது சித்தத்தின்படியே மேனியைக் கொடுக்கிறார்.** (அவர் ஒவ்வொரு விதைக்கும் அதற்கேற்ற விதமான சரீரத்தைக் கொடுப்பார், வானத்துக்குரியவர்களுக்கு வானத்துக்குரிய சரீரத்தையும், உலகத்தாருக்கு பூமிக்குரிய சரீரத்தையும் கொடுப்பார்.) (1 கொரி. 15 : 35-40).

எனவே, மரித்துப் போனவர்கள் தாங்கள் முன் பிருந்ததைப் பார்க்கிலும் அதிக அளவில் உயிரோடு இருக்கிறார் கள் என்று நினைப்பது தவறானதாகும். நீங்கள் தடுமாறி அடிபட்டு உணர்வற்ற நிலையில் கீழே விழுந்துவிட்டால் உங்களுக்கு ஒன்றும் தெரியாது என்றும், ஆனால் இன்னும் கொஞ்சம் அதிகமாக அடிபட்டு உயிர் போய்விட்டால் உங்களுக்கு எல்லாம் தெரியும், நீங்கள் எல்லாவற்றையும் அறிவீர்கள் என்றும் எண்ணுவது தவறாகும். அவ்வித அபத்தம் சாத்தானின் ஆரம்ப பொய்யாகிய, "**நீங்கள் சாகவே சாவதில்லை,**" என்பதிலிருந்து உண்டானதாகும். அதாவது நீங்கள் மாண்டு போய் இருக்கிறதாகக் காணப்பட்டாலும் உண்மையில் சாகிறதில்லை, மரணம் என்பது ஒரு வேஷம், மரணத்திற்குப் பின்னர் உயிர்த்தெழுதலின் நாள் வரைக் காத்திராமல், அதற்கப்பாலுள்ள "அந்த ஜீவியத்திற்குள் பிரவேசித்து" நித்திய வேதனையை அல்லது நித்திய சந்தோஷத்தை அனுபவிப் பதற்கு, எப்போதையும்விட அதிக அளவில் உயிரோடிருக்கிறார் கள், என்ற இந்த கருத்து "**நீங்கள் சாகவே சாவதில்லை**" என்ற சாத்தானின் பொய்யிலிருந்து உண்டானதாகும்.

அழிவில்லாத ஆத்துமா என்ற சொற்றொடர் பரிசுத்த வேதத்தில் இல்லை. இதைப் போலவே மரணத்தில் நல்லவர்கள் மோட்சம் அடைவார்கள் என்ற வாக்குறுதியும் அங்கு காணப்

படவில்லை. இவ்விதமாகத் தேவனுடைய இருதயத்துக்கேற்ற வனாகக் காணப்பட்ட தாவீதைக் குறித்து (அப். 13 : 22) அப்போஸ்தலனாகிய பேதுரு "**தாவீது பரலோகத்திற்கு எழுந்துபோகவில்லையே**" (அப். 2 : 34) எனக் கூறுகிறார். இயேசுவும் தெளிவாக, "**பரலோகத்திலிருந்து இறங்கின மனுஷ குமாரனேயல்லாமல் பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனு மில்லை** (யோவா.3 : 13) என்றும், அவருடைய சீஷர்கள் தங்களுடைய பரலோக பலன்களுக்காக அவருடைய இரண்டாவது வருகை வரைக் காத்திருக்க வேண்டும் என்பதற்காக, "**நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்,** (யோவா. 14 : 3) என்றும் கூறியிருக்கிறார். அவர்களுக்கும் "**இயேசு கிறிஸ்து வெளிப்படும் போது உங்களுக்கு அளிக்கப்படும் கிருபையின் மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள்**" (1 பேது. 1 : 13) என்றும் சொல்லப்பட்டது. பரிசுத்த பவுலும், "**அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் மற்ற யாவரையும் போல்**" (2 தீமோ. 4 : 8) தமது பலனை "**அந்த நாள்**" வரை அடையக்கூடாதிருந்தது.

"பாதாளத்தில் ஐசுவரியவான் (ஐசுவரியவானும் லாசருவும்) போன்ற சில உவமைகளும், "மோசேயும் எலியாவும்" காணப்பட்டது (மத். 17 : 3) போன்ற சில தரிசனங்களும் சொப்பனங்களும், உருவகங்களும் வெளிப்படுத்தின விசேஷத்தி லுள்ளவைப் போன்ற அடையாளங்களும், கருகலான பேச்சுக் களும், மேலே சொல்லப்பட்ட நேரடியானதும், தெளிவானதுமான வேத சத்தியங்களுக்கு மாறுப்பட்டிருப்பது போல் ஆரம்பத்தில் காணப்படலாம். எனினும் சரியாக புரிந்து கொள்ளும்போது அவைகளுக்கு முற்றிலும் இசைந்திருப்பது தெரியவரும். (இந்த உவமைகளும் தரிசனங்களும் மேலே கூறப்பட்டுள்ள சத்தியங்களுக்கு முற்றிலும் இசைந்து இருப்பதை Life-Death-Hereafter) என்ற எமது புத்தகத்தில் மிகத் தெளிவாக விவரிக்கப் பட்டுள்ளன).

## வஞ்சிக்கிற ஆவிகள்

காரியம் இப்படியிருக்க, ஆவியின் உலகிலிருந்து வருவதாகக் கூறப்படுகிற மனோதத்துவ அதிசய சம்பவங்கள், மரித்தோர்களிடமிருந்து வருவதாகக் கூறப்படும் செய்திகள், (தேவ வசனத்தின் பிரகாரம், அவர்கள் ஒன்றும் அறியக்கூடாத வர்கள்), வெகு காலத்திற்கு முன்னரே மரித்து இப்பொழுது ஆவியின் உலகத்தில் இருப்பதாக சொல்லப்படுகிற வைத்தியர் களிடமிருந்து வருவதாகக் கூறப்படும் சரீர சுகங்கள், இயற் கைக்கு விரோதமானத் தோற்றங்கள், ஆவியின் பிடிப்புகள், ஆவியின் சேஷ்டைகள் ஆகியவைகளைக் குறித்து நாம் என்ன சொல்லுவோம்?

"**மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங் களோடும்** (பார்க்கக்கூடாத) **அதிகாரங்களோடும், இப்பிரபஞ் சத்தின் அந்தகார** (அதில் இருள் பூமியையும், காரிருள் ஜனங்களையும் மூடியிருக்கும். ஏசா. 60 : 2) **லோகாதிபதிகளோடும்** (விசேஷமாக சாத்தானோடும்) **வானமண்டலங் களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு**" (எபே. 6 : 12) என்பதை நாம் மறந்துபோகக் கூடாது. இந்த பேய்களாகிய கெட்ட ஆவிகளே "வஞ்சிக்கும் ஆவிகளாகும்." (1 தீமோ. 4 : 1). அவைகள் மிகவும் ஏமாற்றக் கூடியவைகளாக வும், விசேஷமாக சாத்தானின் வஞ்சகப் பொய்யாகிய 'ஜனங்கள் உண்மையில் சாகிறதில்லை; உயிர்த்தெழுதலின் நாளுக்கு முன்னதாகவே ஆவியின் உலகத்தில் நன்கு சுயநினைவு உள்ள ஜீவிகளாக வாழுகிறார்கள்' என்ற ஆரம்ப பொய்யை ஆதரித்து பரவ செய்கிறதில் அக்கறையுள்ளவைகளாக இருக்கின்றன. அவ்வாறே அவைகள் இந்த உலகில் முன் ஜீவித்திருந்த மனுஷ ஜீவிகளாகத் தங்களைக் காண்பித்துக் கொள்கின்றன.

ஜலப்பிரளயக் காலத்திற்கு முன்னர் இந்த ஆவிகள் மனித சரீரங்களில் உருமாறிக் கொண்டு மனுக்குலப் பெண்களை மணந்து தங்களைக் கெடுத்துக் கொண்டன. (1பேது. 3 : 19, 20; 2 பேது. 2 : 4, 5; யூதா 6. அது சம்பந்தமாக மேலும் விவரம் வேண்டுவோர் "*ஆவி மார்க்கம் பிசாசின் மார்க்கமே*" என்ற எங்கள் கட்டுரையைப் பார்க்கவும். கேட்போருக்கு ஒரு பிரதி இலவசமாகக் கொடுக்கப்படும்.)

சுலபமாக பாதிக்கப்படக் கூடியவர்களை இந்தப் பேய்கள் சுலபமாக வசீகரப்படுத்தி, தங்கள் நோக்கங்களை அவர்கள் மூலம் நிறைவேற்றும் எண்ணத்துடன், அடிக்கடித் தரிசனங்களைக் கொடுக்கின்றன. நல்ல மனமுடையவர் பலர், "நாம் கண்டிப்பாக கைக்கொள்ள வேண்டிய "**அதிக உறுதியான வசனமும் நமக்குண்டு**" (2 பேது. 1 : 19) என்பதை மறந்து, தரிசனங்கள் பரலோகத்திலிருந்து நேரடியாக வருவதாக நிச்சயமாக, நம்பி அவைகளால் தங்கள் மனதில் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். சத்திய வேத ஆகமம் முழுவதும் கொடுக் கப்படுவதற்கு முன்னர், தமது ஜனங்களின் போதனைகளுக் காகத் தேவன் சில தரிசனங்களை அனுப்பினார் என்பது உண்மைதான். ஆனால் இப்பொழுதோ தேவ ஆவியின் ஏவுத லால் எழுதப்பட்ட வேத வாக்கியங்களின் மூலமாக "**தேவனுடைய மனிதன் எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாக யிருக்கிறான்.**" (2 தீமோ. 3 : 16, 17). அவனுக்கு இனி தரிசனமோ, சொப்பனமோ அவசியம் இல்லை. (மேலும் விவரங்களுக்கு. B.S. 331–ஐப் பார்க்கவும்.)

இவ்விதம் பலர் ஏமாற்றப்படும்பொழுது வேறு பலர் வேண்டுமென்றே, ஆவி மார்க்கம், மாய வழிபாடு, பிசாசுகளை வணங்குதல் ஆகியவைகளை அனுஷ்டிக்கிறார்கள். சீனர்களி டையேயும், இந்தியா மற்றும் ஆப்பிரிக்காவிலும் இந்த பிசாசுகளின் சக்திகளை அடிக்கடி அவ்வாறே ஏற்றுக் கொண்டு அவைகளுக்குப் பலியிடும் வழக்கம் இருந்து வருகிறது. (1 கொரி. 10 : 20). வட அமெரிக்க இந்தியர்கள் மத்தியில் அவர் களுடைய அநாகரீகமான நிலையில், இந்தப் பொல்லாத ஆவிகள், மற்ற இடங்களில் போலவே கிரியை நடப்பித்து வந்தன. கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறவர் களிடமும் அவைகள் வேலை செய்கின்றன. அவைகள் மாந்திரீகம், பில்லிசூனியம், மந்திரவித்தைகள், வசீகர சக்தி, ஆவிகளுடன் தொடர்புகள், இறந்தவர்களுடன் பேசுதல், மறுஅவதாரம், ஆவி சுகமளித்தல், விசுவாச சுகமளித்தல், என்னவென்றே தெரியாத பாஷைகள், பேய் நடமாட்டங்கள், ஞானதரிசனம், ஞான திருஷ்டி படிகம் பார்த்தல், குறி சொல்லுதல், சோதிடம், சாதகம், மேஜை மூடுதல், முன்னறி வித்தல், கீறி விடுதல், தட்டுதல், ஆவி எழுத்துக்களும் முனுமுனு பேச்சுக்களும், மனதினால் கருத்தறிவித்தல், ஹிப்னாடிசம், மெஸ்மரிசம், சமாதி நிலை, தரிசனம், அற்புதம் (வெளி. 16 : 14). சீட்டுக்கட்டுகளைக் கலைப்பதில் செய்தி, கேள்விகளுக்கு பதிலுக்காக சத்திய வேதாகமத்தைத் திறந்து பார்ப்பது, இப்படிப்பட்ட பல காரியங்கள் மூலம் கிரியை செய்கின்றன.

தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவலும் மற்றவர் களைவிட விசேஷமான மனோ தத்துவ சக்தி படைத்தோர் என்ற முகஸ்துதியுமே பொதுவாகப் பேய்கள், ஜாக்கிரதையாக இல்லாதவர்களை சிக்க வைக்க உபயோகிக்கும் தந்திரமாகும். அபூர்வக் காட்சிகள், கற்பனை உருவம், தரிசனங்கள், உருவமெடுத்தல், பறக்கும் தட்டுகள் ஆகிய வசதியான இந்த மார்க்கங்கள் மூலமாகவே சமீப காலத்தில் அதிக அளவில் இந்தப் பொல்லாத தேவ தூதர்கள் மனுக்குலத்தை அனுகுவதாகத் தெரிகிறது. இவ்விதமாக அவைகள் அவர் களுடைய ஆவலைக் கவர்ந்து அதைக் குறித்து நன்கு விசாரிக்கவும் நடவடிக்கையில் ஈடுபடவும் தூண்டுகிறது.

## பிசாசுகளால் சுகப்படுத்தப்படுதல்

விசேஷமாக கடந்த காலத்தில் ஹிப்னாட்டிசமும் (செயற்கை முறையால் ஏற்படுத்தப்பட்ட தூக்க நிலை) ஆவியால் குணமாக்கப்படுதல்களும் அதிக அளவில் பிரசித்தமாகி பலரைக் கவர்ந்து அடிமை படுத்தியுள்ளன. தங்களுடைய சரீர பாடுகளி லிருந்து விடுதலை பெற வேண்டும் என்று மக்கள் விரும்புவது முற்றிலும் இயற்கையே ஆகும். மரித்துப் போனவர்கள் உண்மையில் சாகவில்லை. ஆனால் ஆவியின் உலகில் உயிருடனிருக்கிறார்கள் என்ற சாத்தானின் பொய்யை மேலும் பரவச் செய்வதற்கு இது பேய்களுக்கு சிறந்த சந்தர்ப்பங்களை அளிக்கின்றது. எனவே அவைகள், உயிருள்ள அல்லது உயிர் அற்ற இரகசிய பிரதிநிதிகள் மூலமாக மாத்திரம் அல்லாது காலம் சென்ற பிரசித்தி பெற்ற வைத்தியர்கள் போல் ஆள்மாராட்டம் செய்தும் சுகமாக்குதலாகிய அற்புதங்களை நடப்பிக்கின்றன. (மேலும் விவரம் வேண்டுவோர் விசுவாசத்தினால் சுகமாக்குதல்" என்ற எமது சிறு புத்தகத்தைப் பார்க்கவும். கேட்போர்க்கு ஒரு பிரதி இலவசமாகக் கொடுக்கப்படும்.) பிரிட்டனில் புகழ் பெற்ற மனோதத்துவ சுகமளிப்பவராகிய ஹேரி எட்வர்ட்ஸ் என்பவரின் காரியங்களை விளக்கியுள்ளோம், அவர் "ஆவி உலகத்தில் உள்ள பல்வேறு மருத்துவர்களிடம் கட்டுப்பட்டிருந்தார், குறிப்பாக லிஸ்டர், பாஸ்டர் போன்றோர் அவரை சுகமளிக்கும் முடிவில்லா ஆதாரமாக ஓர் வாய்க்காலாக உபயோகப்படுத்தினார்." அந்த சிறு புத்தகத்தில் அமெரிக்கரான எட்கார் கெய்சைப் பற்றி நாம் கூறியுள்ளோம். அவர் சுமார் 30,000 "ஆரோக்கியத்திற்கான பாடங்கள்" கொடுத்துள்ளார். அவர் ஹிப்டினாடிசத்தில் சுயநினைவற்ற நிலையில் மருந்து சீட்டைக் கொடுத்துள்ளார். அது (ஐம்பது வருஷங்களுக்கு முன்பு மரித்துப் போன) லண்டனில் உள்ள மருத்துவரால் சொல்லப்பட்டது என்று சொல்லுவார்.

மற்றொரு காரியம் டாக்டர். பெஞ்சமின் ரஷ் என்பவருடையது. அவர் யு. எஸ். விடுதலை அறிவிப்பில் கையெழுத்திட்டவர், பிலடெல்பியா மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பேராசிரியராக இருந்தவர். அவர் 1793-ல் மஞ்சள் காய்சலில் இருந்து 6000 பேரைக் காப்பாற்றியவர், அவர் 1813-ல் மரித்தார். S. ரால்ஃப் ஹார்லோ என்பவர் சிறந்த அறிஞர், நார்த்தம்பானில் மாஸில் உள்ள ஸ்மித் கல்லூரியின் ஓய்வு பெற்ற மதம் மற்றும் வேத இலக்கியங்களில் ஓய்வு பெற்ற பேராசிரியர், (முன்னாள்) காங்கிரிகேஷன் சபையின் நியமனம் செய்யப்பட்ட ஊழியர், ஒரு செய்த்தாளுக்கு மற்ற காரியங் களுடன் ஒரு கட்டுரையில் கீழ்க்கண்டவாறு எழுதினார்.

"ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு நியூயார்க்கில் உள்ள டாக்டர். ரஷ்ஷின் ஆவியைக் கொண்டு மன நலனில் தெளிவாக விசாரிக்கும் குழு சந்திக்கப்பட்டது. அவர் பிலடெல்பியாவில் செயல்பட்டதைக் காட்டிலும் மிகுந்த திறமையுடன் செயல்படு வதாகவும், மேலும் சில நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க விரும்புவதாகவும் அவர் கூறினார். எப்படி இருந்த போதிலும் இரண்டு நிபந்தனைகளில் ஒன்றையாவது நிறைவேற்றும்படி கட்டாயப் படுத்துவதாக அவர் கூறினார். (1) நோயாளி முன்னமே தகுதி பெற்ற மருத்துவரால் கைவிடப்பட்ட நிலையில் இருக்க வேண்டும் அல்லது (2) நோயாளி மருத்துவச் செலவிற்குக் கூட செலவு செய்ய முடியாத அளவிற்கு ஏழையாக இருக்க வேண்டும்.

இதற்குப் பின்பு கேன்சரால் துன்பப்பட்டு ஐந்து கேன்சர் சிறப்பு மருத்துவ நிபுணர்களால் குணப்படுத்த முடியாது என்று கைவிடப்பட்ட என்னுடைய பெண் தோழி ஒருவர் டாக்டர் ரஷ்ஷினுடைய அறிவிப்பைக் கேள்விப்பட்டாள். அவள் அதற்குத் தகுதி பெற்றிருந்தது தெளிவானபடியால்; அவள் நியூயார்க் சென்று மரித்தோரிடம் பேசுபவரிடம் ஒரு தடவை உட்கார்ந்து அதில் கலந்து கொண்டாள். இந்த அமர்வில் அவள் என்ன சொல்லப் போகிறாள் என்று டாக்டர். ரஷ் கவனித்தார். அவர் தன்னுடைய நோயாளிக்கு அன்று இரவு முன்னதாகவே படுக்கைக்குச் செல்லுமாறும் அவள் தன்னை முழுமையான அயர்ந்த நித்திரையிலும் நம்பிக்கையுடனும் ஜெபத்துடனும் இருக்குமாறு அவர் அறிவுரை கூறினார். அவர் ஒரு ஆய்வின் பரிசோதனை செய்யப் போவதாகவும், அதற்காக ஆவிகளின் மீது நம்பிக்கை கொண்டுள்ளவர்களிடம் அவருடைய அறிக்கைக்காக அவள் திரும்பவும் மறுநாளும் வர வேண்டும் என்று கூறினார். அடுத்த நாள் இரவில் அவருடைய அறிவு ரையை முழுமையாகக் கடைப் பிடித்தேன் என்று அவள் கூறினாள். நான் விடா முயற்சியுடன் ஜெபித்தேன், பெரிய சமாதாணத்தை உணர்ந்தேன்; ஏதோ ஒரு சராசரி நிலைமைக்கு மேலான அமானுஷ்ய வல்லமை என்னை சூழ்ந்திருப்பதை உணர்ந்தேன் என்று அவர் கூறினாள்.

"அடுத்த நாள் இரவு ஆவி மார்க்கத்தில் நம்பிக்கை உள்ளவர்கள் கூட்டத்தில் டாக்டர். ரஷ் தான் இந்த நோயாளியின் நோயை சுகப்படுத்தப் போவதாக அறிவித்தார். அமைதலான ஆழ்ந்த உறக்கத்தையும் ஜெபத்தையும் அவர் முக்கியத்துவப் படுத்தினார். அவள் தூங்கிக் கொண்டிருக்கும்போது அவளு டைய புற்று நோயைப் போக்கப் போவதாக அவர் கூறினார்; அடுத்த வாரம் அவள் ஒன்றும் செய்யாமல் படுக்கையில் இருந்தாள். அந்த இரவு அவள் சுயநினைவற்ற நிலைக்குச் சென்றாள்.

"நான் காலையில் எழுந்தபொழுது நான் குணமாக்கப் பட்டதாக அறிந்தேன்! என்று அவள் என்னிடம் சொன்னாள். அறுவை சிகிச்சை நடந்ததற்கான ஒரே அடையாளமாக படுக்கை விரிப்பில் ஒரு சிறிய இரத்தக் கறை மட்டுமே இருந்தது! ஒரு வாரத்திற்குள் தானாகவே ஆடை மாற்றிக் கொள்ள அவளால் முடிந்தது, சில நாட்கள் கழித்து பரிசோதனைக்காக மருத்து வரிடம் சென்றாள். அவர் அவளை முழுமையாக சோதித்துவிட்டு அவள் முழுமையாக புற்று நோயிலிருந்து விடுபட்டதாக அறிவித்தார். அது ஆச்சரியமானது என்று அவர் கூறினார்.

“புற்று நோய் திரும்ப வரவில்லை, பல ஆண்டுகள் அவள் அறியப்பட்டிருந்ததைக் காட்டிலும் இப்பொழுது மிகுந்த ஆரோக்கியத்துடன் காணப்படுகிறாள்.

“சில ஆண்டுகள் கழித்து நான் கிழக்கத்திய பெண்கள் கல்லூரி ஒன்றில் பிரசங்கித்து வரும்பொழுது கல்லூரி சாப்பலின் பொறுப்பாளருடன் நான் உட்கார்ந்தேன். நாங்கள் பேசும் பொழுது என்னுடைய தோழிக்கு உண்டான குணமாக்க முடியாத புற்று நோயை டாக்டர். ரஷ் குணமாக்கியதைப் பற்றியும் நான் குறிப்பிட்டேன்.

“அந்தக் காரியத்தை அவர் எதிர்ப்பார் என நான் எதிர்பார்த்தேன், ஆனால் நான் ஆச்சரியப்படும் விதமாக இவ்வாறு கூறினார்: ஆச்சரியமாக “ஆம் நான் அறிவேன்: அவரைப் பற்றியும் அவருடைய கிரியைகளைப் பற்றியும் நான் அறிவேன். உண்மையிலேயே அவர் என்னுடைய மனைவியின் இக்கட்டான நிலையில் இருந்த வயிற்றுக் குடல் புண் நோயை குணமாக்கினார். அவள் மிகுந்த வேதனையில் கஷ்டப்பட்டாள்; பல மருத்துவர்கள் முழுமையாக சரி செய்ய முடியவில்லை. நாங்கள் முற்றிலுமாக நம்பிக்கை இழந்து விட்டு எப்பொழுதும் எந்த உதவியும் கிடைக்காது என்ற நிலையில் டாக்டர். ரஷ்ஷுடன் தொடர்பு கொண்டிருந்த நியூயார்க் குழுவைப் பற்றிக் கேள்விப் பட்டோம். நாங்கள் அங்கு சென்றோம்; டாக்டர் ரஷ் என்னுடைய மனைவிக்கு பல்வேறு சிகிச்சைகளைக் கொடுத்தார்; இப்பொழுது அவள் பூரண சுகமடைந்துள்ளாள். இதை நான் ஒப்புக்கொள்ள வற்புறுத்தப்பட வேண்டிய அவசியமில்லை என்பது எனக்குத் தெரியும். ஆமானுஷ்ய சக்தி கொண்ட ஓர் ஆவியானது நோயில் வாடும் மக்களுக்கு உதவுவதற்கு விருப்பமுள்ளதாக இருக் கின்றது என்பதற்கு எங்களிடம் ஆதாரம் உள்ளது” என்று கூறினார்.

“பின்னர் டாக்டர் ரஷ்ஷைப் பற்றி மற்றொரு சாட்சியைப் பெற்றேன். இது ஒரு கல்லூரி மனோ தத்துவப் பேராசிரியரி டமிருந்து வந்தது. அவருடைய மனைவியை கணையக் கற்களிலிருந்து தகுதியான மருத்துவர்கள் இந்த நோயாளியைக் கை விட்ட பின் டாக்டர் ரஷ் குணமாக்கினார்” என்று அவர் கூறினார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் மானிட மனது மகத்தான சக்திகள் படைத்தது என்பதை நாம் மறுக்கவில்லை என்பதை நாம் கூறிக் கொள்ள வேண்டும். மனதினால் கருத்தறிவித்தல், (mental telepathy), உடனடியாக ஏற்படும் உள்ளுணர்வு அல்லது மனோ உணர்ச்சி முதலியன அலட்சியப்படுத்தப்படக் கூடிய அல்லது மறுக்கக்கூடிய சக்திகள் அல்ல. ஜனங்களை மேலும் மோசம் போக்காதபடி சாத்தான் முற்றிலும் கட்டப்பட்ட பின்னர் (வெளி. 20 : 2) இந்த சக்திகள் “**இழந்து போனவைகள் எல்லாம் திரும்பக் கொடுக்கப்படும் காலத்தில்**” (அப். 3 : 19-21). சரியானதும் பரிபூரணமானதுமான உபயோகத்துக்கு வரும். ஆனால் இந்தக் காலத்தில், தற்கால நிலைமைகளில் மனோ தத்துவ ஆராய்ச்சி சில அபாயங்களுக்குள்ளானது. ஏனெனில், சாத்தானால் மனோதத்துவ சம்பவங்கள் அடிக்கடி தூண்டிவிடப்பட்டு ஏமாற்றும் முகாந்தரங்களுக்காக முக்கியமாக அவன் யுகா யுகமாய் பிரசித்தப்படுத்தி வருகிற ஆரம்ப பொய்யின் அபிவிருத்திக்காக உபயோகப்படுத்தப்படுகின்றன.

நாம் சாத்தானின் “**தந்திரங்கள்**” (2 கொரி. 2 : 11) குறித்தும், இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிற “**கொடிய வஞ்சகங்கள்**” (2 தெச. 2 : 10-12). சம்பந்தமான அவனுடைய பலவித ஏமாற்றங்கள் குறித்தும் தெரிந்திருக்க வேண்டும். ஏனெனில் அவை இந்தக் காலத்தில், இறந்து போனவர்களின் ஆவியுடன் தொடர்பு வைத்துக் கொள்ளுகிறதாகக் கூறப்படும் “அந்தரங்க விடுதிகளிலோ” (மத். 24 : 26) சாத்தான் சாத்தானை விரட்டி வியாதிகளைக் குணப்படுத்துகிற (மத். 12 : 26) “விசுவாச சுகமளித்தல்” எனப்படும் வெறியாட்டங்களில் தோன்றும் உருவங்களிலோ, ஆவியின் செய்திகள் கொடுப்பதற்கான சாதகங்களாக பேய்கள் உபயோகிக்கிற “பறக்கும் தட்டுகளிலோ,” தரிசனங்களிலோ ஞான திருஷ்டி அல்லது ஞான தரிசன காட்சிகளிலோ, அல்லது வேறு எந்த வழியிலோ நடை பெறுகின்றன. நாம் சரியான பிரகாரம் விழித்திருந்தால் அவை களின் உண்மை நிலை என்னவென்றும், முக்கியமாக வெகு சுறுசுறுப்பாக “**சகல வல்லமையோடும், அடையாளங்களோடும், பொய்யான அற்புதங்களோடும்**” (ஆச்சரியத்தையும் அதிசயத் தையும் தரக் கூடிய அற்புதமான வழிகளில் பேய்கள் கிரியை செய்கின்றன.) (2 தெச. 2 : 9). நடைபெறுகிற சாத்தானின் செயல் குறித்தும் அறிந்து கொள்ளுவோம்.

இரவுக்கும் இருளுக்கும் உள்ளானவர்களாக அல் லாமல், பகலுக்குரியவர்களாகிய நாம் தெளிந்தவர்களாயிருக்க வேண்டும். (1 தெச. 5 : 5, 8). தேவனுக்கு முற்றிலும் உண்மை யும் விசுவாசமுமாயிருந்து, அவருடைய வசனத்துக்குக் கண்டிப்பாகச் செவி கொடுத்து, அதின்படி நடந்து கொள்ளுகிறது மட்டுமே, எதிராளியான சாத்தானின் வஞ்சகங்களிலிருந்தும் அவனுடைய திரளான பேய்க்கூட்டங்களிலிருந்தும் நம்மைக் காத்துக் கொள்ளக்கூடிய நிச்சயமான ஒரே வழியாகும். நாம் “தீமையை வெறுத்து, நன்மையைப் பற்றிக் கொண்டிருப்போமாக.” (ரோம. 12 : 9).

***

## 2013-ம்


## வருடத்திற்கான

## சட்ட வாக்கியம்



# மனிதனின் நித்திய முடிவு

***Man's Eternal Destiny***




## உண்மையான தீர்வை தேவன் தருகிறார்

**உங்களுக்கு தெரியுமா?**

★ மனிதன் தன்னுடைய நித்திய முடிவைக் குறித்த பிரச்சனையை சரிசெய்ய அநேக (நூற்றாண்டுகளாக) யுகங் களாக முயற்சி செய்து கொண்டிருக்கிறான் என்பது உங்களுக்குத் தெரியுமா?

★ கடவுள் நம்பிக்கை இல்லாத நாஸ்திகர்களும் மற்றும் வேறு சிலரும் மரணத்தில் எல்லாம் முடிந்து விடுகிறது என்று கூறுகின்றனர். இருந்தபோதிலும் பொதுவாக கூறுவதென்றால் மனுக்குலமானது மரணத்துக்குப் பிற்பாடு தங்களுக்கு ஒரு சந்தோஷமான வாழ்க்கை இருக்கிறதென்று நம்பிக்கையோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியுமா?

★ மனிதனின் நித்திய முடிவு சம்பந்தமான விடைக்காக சிலர் அஞ்சனக்காரரிடமும் ஜோதிடர்களிடமும் செத்தவர் களிடத்தில் குறிகேட்கிறவர்களிடமும் யோசனை கேட்கின்றனர். ஆனால் அவர்களுடைய பதில் திருப்தியற்றதாகவும் பொய்யான வைகளாகவும் இருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியுமா?

★ அநேக தத்துவ ஞானிகளும், எழுத்தாளர்களும் ஆசிரியர் களும் வேத சாஸ்திர விற்பன்னர்களும் மதத் தலைவர்களும் மனிதனின் நித்திய முடிவு சம்பந்தமான பிரச்சனையைக் குறித்து அநேக தீர்வுகளை அதாவது விடைகளை அளித்துள்ளனர். ஆயினும் அவைகளும் திருப்தியற்றதாகவும் பொய்யானவை களாகவும் அவைகளை நம்பி பிடித்துக் கொண்டிருப்பவர்களை மிகுந்த ஏமாற்றமடையச் செய்வதாகவும் இருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியுமா?

★ அவர்களுடைய இத்தகைய விடைகளெல்லாம் பொய்யான வைகள். ஏனென்றால் அவை "**நீங்கள் சாகவே சாவதில்லை**" (ஆதி. 3 : 4; யோவா. 8 : 44) என்று ஏதேன் தோட்டத்தில் சாத்தானால் கூறப்பட்ட மாபெரும் பொய்யை அடிப்படையாகக் கொண்டவைகளாக இருக்கின்றன. சாத்தானானவன், சரீரம் மரித்தவுடன் மானிட ஆத்துமா உயிரோடு இருக்கும் – அது கூடுவிட்டு கூடு பாய்ந்து வேறொரு சரீரத்திற்குள் போகும் அல்லது மறுபடியும் பிறக்கும் அல்லது மத்திய நிலையாகிய "பர்கேட்டரி" என்ற உத்தரிப்பு ஸ்தலத்திற்குள் போகும் அல்லது நேரடியாகவே பரலோக நித்திய மகிழ்ச்சிக்குள்ளோ அல்லது நரகத்தில் நித்திய வேதனைக்குள்ளோ மனித ஆத்துமாக்கள் போகின்றன என்ற இதுபோன்ற கோட்பாடுகள் மற்றும் உபதேசங்களின் மூலம் சாத்தான் "**நீங்கள் சாகவே சாவதில்லை**" என்ற தன் ஆதிப் பொய்யை இன்னும் பரப்பிக் கொண்டு இருக்கிறான் என்பது உங்களுக்குத் தெரியுமா?

★ ஆத்துமா அழியாமையுள்ளது என்ற கேட்பாட்டிற்கு மாறாக வேதாகம தீர்வானது மனிதனே ஓர் ஆத்தமா என்ற வேதாக மத்தின் தெளிவான உபதேசத்தை அடிப்படையாக கொண்டி ருக்கிறது. ஆதி. 2 : 7 – மனிதன், ஆத்துமாவை தனக்குள் உடையவனல்ல. வேத புத்தகமானது ஆத்துமா அழிவுடையது தான் என்றும் "**பாவம் செய்கிற ஆத்துமா சாகும்**" என்றும் (எசே. 18 : 4, 20; சங். 56 : 13; 78 : 50; 116 : 8; யாக். 5 : 20). நல்லோர் பொல்லார்களாகிய ஆத்துமாக்கள் மரணத்தில் உணர்வற்ற நிலையில் தூக்கத்தில் (நித்திரையில்) இருக்கின்றன, (உபா. 31 : 16; 2 ராஜா. 16 : 20; 21 : 18; சங். 90 : 3-5; யோவா. 11 : 11-14, 44; அப். 2 : 29,34; 13 : 36; 1 தெச. 4 : 13-15) என்று வேதாகமம் தெளிவாக போதிக்கின்றது என்பது உங்களுக்குத் தெரியுமா?

★ வேதாகம நரகம் அல்லது பாதாளத்தில், (ஷியோல், ஹேட்ஸ் என்ற எபிரேய கிரேக்க வார்த்தைகள் அடிக்கடி கல்லறை என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது) எல்லா ஆத்துமாக்களும் உயிர்த் தெழுதலில் எழுப்பப்படும் வரை உணர்வற்ற ஒன்றும் அறியாத நிலைமையில் தூங்குகின்றன (நித்திரை செய்கின்றன) என்பது உங்களுக்குத் தெரியுமா? (ஆதி. 37 : 35; யோபு 14 : 13; சங். 6 5; பிர. 9 : 10).

★ மரணத்திற்கு பிற்பாடு ஓர் எதிர்கால ஜீவியத்திற்கான ஒரே மெய்யான நம்பிக்கை மரித்தோரின் உயிர்த்தெழுதலில் அடிப்படையாக கொண்டதாகும். (தானி. 12 : 1, 2; யோவா. 5 : 28, 29; அப். 24 : 15) மரணத்திலிருந்து உயிர்த்தெழுதல்

இல்லையென்றால் இதுவரை மரித்த அனைவரும் என்றென்றும் மரித்தவர்களாகவே இருப்பார்கள். "**கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் கூட அழிந்திருப்பார்களே**" (கெட்டிருப்பார்கள் என்பது சரியான மொழிபெயர்ப்பு அல்ல. ஆங்கில வேதாகமம் பார்க்கவும் ஆங்கிலத்தில் - perished என்றே உள்ளது) என்றென்றும் மரித்தோராகவே இருந்திருப்பார்கள். (1 கொரி. 15 : 6, 18) என்பது உங்களுக்குத் தெரியுமா?

★ பூமியிலிருந்து உண்டான மண்ணானவனும் தேவ தூதரிலும் சற்றுச் சிறியவனாக சிருஷ்டிக்கப்பட்ட முதல் மனிதனாகிய ஆதாமுக்குள் மனுக்குலமானது பரலோக ஜீவியத்தை (வாழ்க்கையை) இழக்க வில்லை. (ஆதாமுக்கோ அல்லது அவனுடைய சந்ததிக்கோ பரலோகம் கொடுக்கப்படவும் இல்லை, கொடுப்பதாக வாக்குத்தத்தம் பண்ணப்படவும் இல்லை). ஆனால் ஆதாமுக்குள் மனுக்குலமானது பூமியில் நித்திய ஜீவனைத்தான் இழந்தது. பூமியின் மீது மட்டும்தான் ஆதாமுக்கு ஆளுகை கொடுக்கப்பட்டது. (சங். 8 : 5-8; 1 கொரி. 15 : 47; ஆதி. 1 : 26-28; 3 : 22-24) என்பது உங்களுக்குத் தெரியுமா?

★ ஆதாமின் கீழ்ப்படியாமையினாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது போலவும் எல்லா மனுஷரும் பாவஞ் செய்தபடியால் மரணம் (ஜீவனோடிருப்பதிலிருந்து நிறுத்தப்படுதல் - நித்திய வேதனை அல்ல), எல்லாருக்கும் [வம்ச பாரம்பரியத்தினால் எல்லாரும் பாவத்தில் பிறந்திருக்கிறோம் . துர்க்குணத்தில் உருவானோம்] வந்தது போலவும் இதுவும் ஆயிற்று. (ரோம. 3 : 9, 10; 5 : 12, 17-19; 6 : 23; 1 கொரி. 15 : 21, 22; சங். 51 : 5) என்பது உங்களுக்குத் தெரியுமா?

★ நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார். [தேவ பக்தியில்லாதவர்களையும், பாவிகளையும் இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்] கிறிஸ்து நம் எல்லாருக்காகவும் மரித்தார். ஒவ்வொருவருக்காகவும் மரித்தார். இரட்சகராகிய இயேசுவில் விசுவாசம் வைப்பதின் முலம் மாத்திரமே பாவிகள் தேவனுக்கு முன்பாக சீர் பொருந்தினவர்களாக்கப்படுவார்கள். (ரோம. 5 : 8-11; 1 தீமோ. 1 : 15; 2 கொரி. 5 : 14, 15; எபி. 2 : 9; அப். 16 : 31; ரோம. 3 : 24-26; 5 : 1; எபே. 2 : 8-10; 1 யோவா. 5 : 11-13) என்பது உங்களுக்குத் தெரியுமா?

★ அடுத்ததாக நாம் நிச்சயமாக பிரதிஷ்டை செய்ய வேண்டும். அதாவது நம்முடைய சொந்த சித்தங்களை விட்டுவிட்டு, இயேசு செய்ததைப் போலவே தேவனுடைய சித்தத்தை நம்முடைய சொந்த சித்தமாக ஏற்றுக் கொள்ள வேண்டும் (எபி. 10 : 7) அதன் பிறகு அவருடைய உண்மையுள்ள சீஷர்களாக முடிவு பரியந்தம் நிலைத்திருக்க வேண்டும். அவ்வாறு இருந்தோமானால் நித்திய ஜீவனை நமது முடிவாகப் பெறுவோம். (ரோம. 5 : 2; 12 : 1; 6 : 23; நீதி. 23 : 26; மத். 16 : 24-26; யோவா. 10 : 27, 28) என்பது உங்களுக்குத் தெரியுமா?

★ ஏனென்றால் இயேசு "**எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மையே ஒப்புக் கொடுத்தார். எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும்** [ஆதாமின் தண்டனையிலிருந்து] ***சத்தியத்தை அறிகிற*** (துல்லியமான) **அறிவை அடையவும் தேவன் சித்தமுள்ளவராக இருக்கிறார்.**" (1 தீமோ. 2 : 4-6; 4 : 10; 1 யோவா. 2 : 2) என்பது உங்களுக்குத் தெரியுமா?

★ சுவிசேஷ யுகத்தில் உலகத்தாரிடமிருந்து பிரித்தெடுத்து, தெரிந்துக் கொள்ளப்பட்டு (யோவா. 15 : 19; அப். 15 14; வெளி. 5 : 9) மனந்திரும்புதலின் மூலமாகவும், இரட்சகராகிய இயேசுவின் மீதான விசுவாசத்தின் மூலமாகவும், பிரதிஷ்டை செய்து, அதைக் காத்துக் கொள்வதின் மூலமாகவும், தேவனிடத்திற்கு வருகிறவர்கள், இந்த விதிக்கு விலக்கானவர்களாகி, தங்களுடைய நித்திய முடிவாக, பரலோகத்தில் நித்திய ஜீவனை இறுதியில் அடைவார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா? (யோவா. 14 : 1; 2 கொரி. 5 : 1, 2; எபி. 10 : 34; 1 பேது. 1 : 4)

★ இந்த ஜீவியத்தில் இரட்சிக்கப்படுவதற்கேதுவான, நிறைவானதும் பூரணமானதுமான சந்தர்ப்பங்கிடைக்க பெறாதவர்களான இந்த பொதுவான மனுக்குலமானது தங்களது முடிவான நித்திய சமாதானத்துடனும் சந்தோஷத்துடனும் பூமியில் நித்திய ஜீவனை அடைந்து கொள்வதற்கான சந்தர்ப்பத்தை பொதுவாகப் பெற்றுக் கொள்வார்கள். (ஏசா. 2 : 2-4; 11 : 9; 25 : 6-9; 35; 65 : 17-25; மீகா 4 : 1-4; அப். 15 : 17; வெளி. 21 : 24; 22 : 3) என்பது உங்களுக்குத் தெரியுமா?

★ இயேசுவும் அவருடைய சுவிசேஷ யுக சீஷர்களும் தங்களுடைய விசுவாசத்தின் காரணமாக ஆபிரகாமின் வித்தாக (பிள்ளைகளாக) இருக்கிறார்கள். அவர்கள் மூலமாக வரப்போகிற "**இழந்து போனவைகள் எல்லாம் திரும்பக் கொடுக்கப்படும் காலங்களில்**" அதாவது ஆயிர வருட யுகத்தில், பூமியின் வம்சங்கள் யாவும் ஆசீர்வதிக்கப்பட்டு, நீதியாக நியாயந்தீர்க்கப்படுவார்கள். (ஆதி. 12 : 3; 22 : 16-18; கலா. 3 : 8, 16, 29; அப். 17 : 31; 2 தீமோ. 4 : 1; 2 பேது. 3 : 7, 8; வெளி. 20 : 12, 13) என்பது உங்களுக்குத் தெரியுமா?

★ தேவனுடைய ஆயிர வருட யுக பரீட்சையில் மனதாரக் கீழ்ப்படிகிறவர்களாகக் காணப்படுகிறவர்கள் "**புதிய வானங்களில்**" அல்ல, ஆனால் "**புதிய பூமியில்**" (2 பேது. 3 : 13) தங்களது முடிவாக நித்திய ஜீவனை அடைந்து கொள்வார்கள். அபாத்திரராகக் காணப்படுகிறவர்கள் தண்டனையாக இரண்டாம் மரணத்தில் நித்தியமாக அழிந்துபோவார்கள். அறுப்புண்டு போவார்கள். பிசாசும் அவனுடைய தூதர்களும் இரண்டாம் மரணத்தில் அழிந்து போவார்கள். (சங். 37 : 9-11, 22, 29, 34, 38; 145 : 20; நீதி. 2 : 21, 22; ஏசா. 1 : 28; 60 : 21; மத். 25 : 31-46. அக்கினி என்பது அழிவின் அடையாளமாகும்; எபி. 2 : 14; வெளி. 20 : 14, 15; 21 : 8) என்பது உங்களுக்குத் தெரியுமா?

★ "**வானங்கள் கர்த்தருடையவைகள்** (யேகோவாவினுடையது); **பூமியையோ மனுப்புத்திரருக்குக் கொடுத்தார்**;" ஏனெனில், "**பூமியை வெறுமையாயிருக்க சிருஷ்டிக்காமல் அதைக் குடியிருப்புக்காகச் செய்து படைத்து அதை உருவேற்படுத்தினார்.**" "**அது என்றைக்கும் நிலைத்திருக்கும்.**"

(சங். 115 : 16; ஏசா. 45 : 18; ஏசா. 46 : 9-11; 55 : 10, 11; பிர. 1 : 4; சங். 104 : 5; 119 : 90) என்பது உங்களுக்குத் தெரியுமா?

***

# எது சத்தியம்?

***WHAT IS TRUTH ?*** *(Tract)*

***"வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது" - 2 தீமோ. 3 : 16, 17.***

"**நீதியின்மேல்** (சரியானதும், உண்மையானதும், நன்மையுமானவை) **பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள்** (வேறு யாருமல்ல) **திருப்தியடைவார்கள்**". "**கேளுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்: தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்: தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்**" "**சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை** (பாவம், தப்பறை, அறியாமை, மூடபக்தி, மனிதனுண்டாக்கிய குழப்பமுள்ளதும் ஒன்றுக்கொன்று முரணானதுமான சித்தாந்தங்கள், விசுவாசப்பிரமாணங்கள், மதங்கள் ஆகியவற்றிலிருந்து) **விடுதலையாக்கும்**" என்று இயேசு வாக்குத்தத்தஞ் செய்கிறார். (மத். 5 : 6; லூக். 11 : 9, 10; யோவா. 8 : 32)

## சத்தியத்தை நாம் எங்கே கண்டுபிடிப்போம்?

வெளிப்படுத்தப்படும் சத்தியத்தை, மனிதன் அறிந்து கொள்ளும்படி அவனுக்கு சக்தியைக் கொடுத்த ஞானமுள்ள சிருஷ்டி கர்த்தா ஒருவர் இருக்கிறார். "**பரத்திலிருந்து வருகிற ஞானமாகிய**" சுத்தமான சத்தியத்தைக் கண்டுபிடிக்க வேண்டுமானால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும், ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமான **ஜோதிகளின் பிதா**வாகிய தேவனை நாம் தேட வேண்டும். (யாக். 1 : 5, 17; 3 : 17) சாத்தானென்றும், பிசாசென்றும், பழைய பாம்பென்றும் அழைக்கப்பட்டு உலகமனைத்தையும் ஏமாற்றிக் கொண்டிருக்கிற, "*பொய்களின் பிதாவை*" நாம் நம்பக்கூடாது. (ஆனால் சாத்தானையே மக்கள் அதிகமதிகமாக வெளியரங்கமாகக் கூட வணங்குகிறார்கள்). "**உங்கள் எதிராளியாகிய இவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல எவனை விழுங்கலாமோவென்று வகை தேடிச் சுற்றித்திரிகிறான்**" "**இப்பிரபஞ்சத்தின் தேவனாகிய**" இவன் "**ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்து,** (தேவனுடைய வசனத்தை) **விசுவாசியாதவர்களின் மனதைக் குருடாக்கினான்.**" அவன், "**ஆதி முதற்கொண்டு மனுஷ கொலை பாதகனாயிருக்கிறான். சத்தியம் அவனிடத்தில் இல்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலை நிற்கவில்லை. அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய் பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான்**" (வெளி. 12 : 9; 1 பேது. 5 : 8; 2 கொரி. 4 : 4; 11 : 14; யோவா. 8 : 44; 14 : 30; 16 : 11).

ஆகையால், தெய்வீக சத்தியத்தை தேடுகையில், எவரும் சாத்தானால் ஏவப்பட்ட மனிதனுடைய கோட்பாடுகளிலும், விசுவாசப் பிரமாணங்களிலும் தேடலாகாது. சத்தியமல்லாதவையாயினும் சத்தியமென உரிமை கொண்டாடும் இவைகள் மனுஷரால் எவ்வளவு விரும்பப்பட்டவைகளாயினும் கவலையில்லை; இவைகளில் சத்தியத்தைத் தேடாது பரிசுத்த வேதாகமத்தில் தேட வேண்டும். (வேதாகமத்திலுள்ள அநேக உள்ளான, புறம்பான அத்தாட்சிகள் அது தேவனுடைய வாக்கு, சத்தியம் என நிரூபிக்கிறது) இதைக் குறித்து இயேசு, "**உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்: உம்முடைய வசனமே சத்தியம்**" என்று கூறினார். (யோவா. 17 : 17; 6 : 63).

"**கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே நம்மை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவர்களாக்கத்தக்கது**" பரிசுத்த வேத எழுத்துக்களே; ஏனெனில், "**வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது: தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜன முள்ளவைகளாயிருக்கிறது.**" (2 தீமோ. 3 : 15-17)

வேத சத்தியத்தை அறிய விரும்பும் ஒருவன் உண்மையும், தாழ்மையும், சாந்தமும், முன்னுள்ள தனது அபிப்பிராயங்களையும்கூடத் தள்ளிப்போடவும் விருப்பமுடையவனாயும் இருக்க வேண்டும். "**தேவன் சத்தியபரராயிருப்பது எந்த மனிதனையும் பொய்யனாக்குகிறது**", என்பதை ஒருவன் ஒப்புக் கொள்ளவேண்டும். "**இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால் அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை.**" இப்படியாக ஒருவனுடைய விசுவாசம் மனுஷனுடைய ஞானத்திலே நிற்காமல், தேவனுடைய பெலத்திலேயே நிற்கிறது. (ரோம. 3 : 4; ஏசா. 8 : 20; 1 கொரி. 2 : 4, 5).

### ஜோதிகளின் பிதாவுக்கு எதிராகப் பொய்களின் பிதா :

**ஜோதிகளின் பிதா** ஆதாமிடம் சொன்னது : "**அதை நீ புசிக்கும் நாளில் (கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம் வருடங்கள் போல இருக்கிறது – 2 பேது. 3 : 8; சங். 90 : 4 –** ஆதாம் 930 வயதில் மரித்தான்) **நீ சாகவே சாவாய்,**" (நீ செத்துக்கொண்டே சாவாய் மார்ஜினில் பார்க்கவும்) (ஆதி. 2 : 17) - ஆனால் பொய்களின் பிதா பகிரங்கமாகவே தேவன் சொன்னதை மறுத்து, "**நீங்கள் சாகவே சாவதில்லை**" என்ற மாபெரும் நிரந்தரமான முதற்பொய்யை ஏவாளிடத்திலே சொன்னான். (ஆதி. 3 : 4).

மரணத்தில், "**நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால், நீ பூமிக்கு திரும்புவாய்: நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய்**" என **ஜோதிகளின் பிதா** ஆதாமுக்குத் தண்டனை விதிக்கும்போது, அவனுக்குச் சொன்னார் (ஆதி. 3 : 19); ஆனால் *பொய்களின் பிதா* இதற்கு மாறாக, ஆதாம் மரணத்தில் அவன் முன்னிருந்த நிலைமைக்கு 'திரும்பவில்லை'; ஆனால், இன்னும் ஜீவனோடிருந்தே, முற்றிலும் ஓர் புதிய நிலைமைக்குப் போனான் என்று பொய் சொல்லுகிறான்."

சரித்திரம் நிரூபிக்கிறதுபோல, **ஜோதிகளின்பிதா**, அவர் விதித்த மரண தண்டனையை எல்லா இடங்களிலுமுள்ள மானிட சந்ததிகள் மீது நிறைவேற்றிவிட்டார். ஆனால், *பொய்களின் பிதாவோ* ஏவாளை, அவளும், ஆதாமும், அவன் சந்ததியாரும் '**தேவர்களைப் போல**' (தூதரைப் போல) என்றென்றும் சிரஞ்சீவிகளாக வாழ்வார்களென நம்பும்படி ஏமாற்றிவிட்டான். (ஆதி. 3 : 5; 1 தீமோ. 2 : 14).

**ஜோதிகளின் பிதா**, இச்சத்தியத்தைத் தெளிவாய் நமக்குத் தந்து, இவ்வெளிச்சத்தில் பவுல் அப்போஸ்தலன் மூலமாய்க் கிறிஸ்தவர்களுக்குப் பின்வருமாறு கூறினார். "**ஆகிலும், சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்தது போல, உங்கள் மனதும் கிறிஸ்துவைப் பற்றிய உண்மையினின்று விலகும்படி கெடுக்கப்படுமோவென்று பயந்திருக்கிறேன்.**" (2 கொரி. 11 : 3) - ஆனால், *பொய்களின் பிதாவோ*, ஒருபொழுதும் ஆவியினால் ஜெனிப்பிக்கப் படாதவனாய், மனிதப் பிராணியாகவே சிருஷ்டிக்கப்பட்ட ஆதாம், எவ்விதமோ ஆவிக்குரிய மரணமடைந்தான் என்றும், மரணத்தில் அவனும், அவனுடைய சந்ததியார் அனைவரும் மேலும் ஜீவனோடிருக்கிறார்கள் (பரலோகத்தில் அல்லது நித்திய சித்திரவதையில், அல்லது இவை இரண்டிற்கும் இடையேயுள்ள ஓர் உணர்வுள்ள நிலைமையில்) என்றும்; ஆகையால் உயிர்த்தெழுதலின்

நாளுக்கு அவர்கள் காத்திருக்க வேண்டிய அவசியமில்லையென்றும் கூறி, அநேகரை ஏமாற்றுகிறான்.

**ஜோதிகளின் பிதா**, "**மனுப்புத்திரருக்குச் சம்பவிக்கிறது மிருகங்களுக்கும் சம்பவிக்கும். அவர்களுக்கும், இவைகளுக்கும் ஏக சம்பவமுண்டு. இவைகள் சாகிறது போலவே அவர்களும் சாகிறார்கள். ஜீவன்களுக்கெல்லாம் சுவாசம் ஒன்றே: மிருகத்தைப் பார்க்கிலும் மனுஷன் மேன்மையுள்ளவன் அல்ல, எல்லாம் ஒரே இடத்திற்குப் போகிறது.** (பரலோகத்திற்கோ, நித்திய நரக வேதனைக்கோ அல்ல). **எல்லாம் மண்ணிலே உண்டாகிறது: எல்லாம் மண்ணுக்கு திரும்புகிறது**" (பிர. 3 : 19, 20; சங். 49 : 14) என்று கூறுகிறார் – ஆனால், *பொய்களின் பிதாவோ,* "மரணத்திற்குப்பின் அநேக மனிதருடைய கதி, மிருகங்களை விடப் படுமோசமடைகிறது. மிருகம் மரணத்தில் ஜீவனற்று அழிந்து போவதினால் அதற்கு எவ்விதமாக துன்பமுமில்லை. ஆனால், மனு மக்களோ உண்மையாகவே மரிக்காமல் ஏறக்குறைய அவர்களெல்லாரும் ஜீவனோடிருந்து – நித்திய நரக வேதனையில் வாதிக்கப்படுகிறார்கள், என்று கூறுகிறான்.

**ஜோதிகளின் பிதா, "மனிதன் ஜீவாத்துமாவானான்."** [எபிரெய பதம் : நாபேஷ் = உணர்ச்சியுள்ள பிராணி] "**பாவஞ் செய்கிற ஆத்துமாவே சாகும்**," "**ஒருவனும் தன் ஆத்துமா அழியாதபடி அதைக் காக்க கூடாதே**" (ஆதி. 2 : 7; எசே. 18 : 4, 20; சங். 22 : 29; 30 : 3; 78 : 50) என்ற கூறுகிறார். ஆனால், பொய்களின் பிதாவோ, மனிதனுடைய ஆத்துமா தன்னில் தானே ஜீவனுடையது என்றும்; அது, சாகவே முடியாதென்றும்; அது ஏதோ ஓர் அணு போன்ற மிக நுட்பமானதும், பிரிக்கக்கூடாததும், பார்க்கக்கூடாததுமாக அவனுக்குள்ளேயே இருந்து, சதாகாலமும் அவசியம் உயிரோடிருக்க வேண்டியது என்று உபதேசிக்கிறான்.

**ஜோதிகளின் பிதா, "பாவத்தின் சம்பளம் மரணம்: தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்,** (மரண நிலைக்கு எதிரானது)" (ரோம. 6 : 23) என்று கூறுகிறார். ஆனால், *பொய்களின் பிதாவோ,* இதற்கு நேர்மாறாகப், "பாவத்தின் சம்பளம் (தண்டனை) மரணமல்ல; நரக வேதனையுள்ள நித்திய ஜீவன் என்றும், பொல்லாதவர்கள் தேவனிடமிருந்து கிறிஸ்துவின் மூலம் நித்திய ஜீவனை ஈவாகப் பெறாமல் தேவன் தாமே அழிக்கக் கூடாததாய் அவர்களுக்குள்ளிருக்கும் ஆத்துமாவாலேயே நித்திய ஜீவனைப் பெறுகிறார்களென்றும் உபதேசிக்கிறான். இவ்விதமாகத் தேவன், "**ஆத்துமாவையும், சரீரத்தையும் நரகத்திலேயே அழிக்கக் கூடியவராக இருக்கிறார்**" என்று இயேசு கூறியதற்கும் எதிரிடையாகக் கூறுகிறான். [இங்கே நரகம் என உபயோகித்திருக்கிற வார்த்தைக்கு மூல பாஷை, ஹேடீஸ் அல்ல, கெஹென்னா அதாவது இன்னோம் பள்ளத்தாக்கு என்ற பதம். இது இரண்டாம் மரணமாகிய நித்தியமான பரிபூரண அழிவைக் குறிக்கிறது]. (மத். 10 : 28).

**ஜோதிகளின் பிதா, "மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்" "அவன் பிள்ளைகள் கனமடைந்தாலும் அவன் உணரான்: அவர்கள் சிறுமைப்பட்டாலும் அவர்களைக் கவனியான்." "அவனுடைய ஆவி பிரியும், அவன் தன் மண்ணுக்குத் திரும்புவான்: அந்நாளிலே அவன் யோசனைகள் அழிந்துபோம்." "மரணத்தில் உம்மை நினைவு கூர்வதில்லை, பாதாளத்தில்** (grave - **கல்லறைக் குழியில் மரண நிலையில்) உம்மைத் துதிப்பவன் யார்?**" (பிர. 9 : 5, 10; யோபு 14 : 21; சங். 146 : 4; 6 : 5; 115 : 17) ..... ஆனால், *பொய்களின் பிதாவோ,* இதற்கு நேர் விரோதமாக – அடிக்கடி திறமையுள்ள போதகர்கள், சித்திரக்காரர்கள் மூலம் – இறந்து போன பெற்றோர், ஆவி உலகத்தில் இன்னும் உயிரோடிருந்து, பூமியிலுள்ள தங்கள் குழந்தைகளை நடத்துகிறார்கள் என்று கூறுகிறான்.

**ஜோதிகளின் பிதா,** "(தம்மைத் தவிர) **இயேசு ஒருவர் மாத்திரமே சாவாமையுள்ளவர்**" (1 தீமோ. 6 : 16) என்று கூறி, முதலாம் உயிர்த்தெழுதலில் (அதற்கு முன்னல்ல) அவர் அவர்களுக்கு "அளிக்கப் போகிற" மகிமை, கனம், அழியாமையைத் தேடும்படி திருச்சபைக்கு அவர் போதித்தார். "**தேவனுடைய நீதியுள்ள தீர்ப்பு வெளிப்படும் கோபாக்கினையின் நாளிலே**" – இங்கே சுவிசேஷ யுக முடிவிலுண்டாகும் மகா உபத்திரவ காலத்திலே – கிறிஸ்துவின் மணவாட்டியாக அவர்கள், "**அவரைப்போல**", மாற்றப்பட்டு "**அழியாமையைத் தரிப்பார்கள்**" என்று கூறுகிறார். (ரோம. 2 : 5–7; வெளி. 20 : 6; தானி. 12 : 1–3; 1 யோவா. 3 : 2; 1 கொரி. 15 : 53, 54). ஆனால், பொய்களின் பிதா, "மனித ஆத்துமா தன்னில்தானே ஜீவனுள்ளதாகையால், அழியாமையுள்ளதென்றும், உனக்கு இயற்கையாகவே உள்ளதும், மனிதனாகப் பிறந்தது முதலே உனக்கு உண்டாயிருந்ததுமான அழியாமையைத் "தேடுவதும், அணிந்து கொள்வதும் மூடத்தனமானது" என்று கூறுகிறான்.

**ஜோதிகளின் பிதா,** இவ்வாறு கூறுகிறார் "**இயேசு மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்,**" (கொலோ. 1 : 18; வெளி. 1 : 5) அவருடைய வசனத்தின் மூலம் ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டு (யோவா. 3 : 5; 1 கொரி. 4 : 15; யாக். 1 : 18; 1 பேது. 1 : 3, 23, 25) பின்பு இயேசுவைப் போல மரணத்திலிருந்து உயிர்த்தெழுதலில் ஆவி ஜீவியாகப் பிறந்தவர்கள் மட்டுமே பரலோகத்தில் மானிடக் கண்களால் பார்க்கக்கூடாத நிலைமையில், தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கக் கூடும். ஆகையால், இயேசுவின் முதலாம் வருகைக்குமுன் "**பரலோகத்துக்கு**" ஏறினவன் "**ஒருவனுமில்லை**" (யோவா. 3 : 13) என்றும் பெந்தேகோஸ்தே சமயத்தில் தாவீது "**பரலோகத்துக்கு எழுந்து போகவில்லையே**" (அப். 2 : 29–34) என்றும், இயேசுவின் இரண்டாம் வருகை வரையிலும் அப்போஸ்தலர்கள் கூடத் தங்களின் பரலோகப் பரிசான அழியாமையால் முடி சூட்டப்படக் காத்திருக்க வேண்டியதாயிருந்தது என்றும். (வெளி. 2 : 10; 1 கொரி. 15 : 48–54; கொலோ. 3 : 4; 1 தெச. 4 : 13–17; 2 தீமோ. 4 : 8; 1 பேது. 1 : 4, 5, 13; 5 : 4; யோவா. 14 : 2, 3; 1 யோவா. 3 : 2). ஆயிர வருட நியாயத் தீர்ப்பு நாளில் அச்சமயம் நடைபெறும் "**நீதிமான்களின் உயிர்த்தெழுதலில்**" (அப். 17 : 31; 2 பேது. 3 : 7, 8) பூர்வ காலத் தீர்க்கத்தரிசிகளுடன் தமது ஜனங்களுக்கெல்லாம் கிறிஸ்து பலனளிக்கிறார் என்றும் கூறுகிறார். (மத். 16 : 27; லூக். 14 : 14; வெளி. 11 : 18; 20 : 12; 22 : 12) ...... ஆனால் *பொய்களின் பிதாவோ,* ஒருவரும் காத்திருக்க வேண்டியதில்லை; ஆனால் மரணத்தில் எல்லாரும் நியாயந்தீர்க்கப்பட்டு, பரலோகத்தில் நித்திய ஜீவனையோ அல்லது பாப்பு மார்க்கத்தாரும், மற்றும் பெரும்பாலான புரோட்டஸ்டான்டு மார்க்கத்தாரும் பிற மதத்திலிருந்து எடுத்துக் கொண்ட எரிநரக நித்திய வேதனையையோ அடைகிறார்கள் என போதிக்கிறான்.

**ஜோதிகளின் பிதா** "**உயிர்த்தெழுதலின் காரணமாக ஆதாமுக்குள் மரிக்கிறவர்கள் முற்றிலும் நிர்மூலமாகிப் போகவில்லையென்றும், பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்டுப் புறப்பட்டு வருங்காலம் வருகிறது. ஏனென்றால் கிறிஸ்து, எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்தார். இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கி வருகிறது.**" ஆகையால், "**எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும்,** (ஆதாமுடைய தண்டனையிலும், மரணத்திலுமிருந்து) **சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் தேவன் சித்தமுள்ளவராயிருக்கிறார்.**" அதன் பின்பு அவரிடமிருந்து நித்திய ஜீவனைப் பெறும் ஒரே ஒரு பூரண அவகாசத்தை ஈவாக அடைய வேண்டும். (உலக ஜனத்தொகை வீதத்தைப் பார்க்கும் பொழுது இதுவரை சொற்பப் பேருக்குத் தான் இவ்வாய்ப்பு கிடைத்திருக்கிறது). ஆகையால், உணர்வற்ற மரண நித்திரையில், "**பூமியின் தூளில்**" "**நித்திரையடைந்தவர்களினிமித்தம் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப் போல நாம் துக்கப்படுகிறதில்லை**" ஏனென்றால் "**அவர்கள் விழித்தெழுந்திருப்பார்கள்**" "**ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்.**" (யோவா. 5 : 28, 29; 1 தீமோ. 2 : 4–6; 1 தெச. 4 : 13–17; தானி. 12 : 2; 1 கொரி. 15 : 22) ஆகையால் பொய்களின் பிதாவோ, "**நீங்கள் சாகவே சாவதில்லை**" – நீங்கள் மரிக்கிறது போலத் தோன்றும்; ஆனால், உங்களுடைய சரீரம் மாத்திரம் மரணத்தில் நித்திரையடைகிறது; நீங்கள் (அதாவது உங்கள் ஆத்துமா) முற்றிலும் விழித்திருக்கிறது; முன்னிலும் அதிகமாய் ஜீவனோடிருக்கிறது, உங்களுக்கு ஒரு போதும் உண்மையாகவே தேவைப்படாத உங்கள் மாம்ச சரீரமானது ஆத்துமாவுடன் திரும்பவும் சேர்த்து கட்டப்படுவதுதான் உயிர்த்தெழுதல் என்று போதிக்கிறான்.

**ஜோதிகளின் பிதா,** – பாவத்தின் கொடிய பலாபலன்களை மனுக்குலம் அனுபவத்தால் கற்றறிந்த பின் அவர், அவருடைய ஞானம், நீதி, அன்பு, வல்லமையாகிய குணசீலங்களுக்கிணங்கத் திருந்தக் கூடாத துன்மார்க்கர் யாவரையும் அழித்து பிரபஞ்சத்தைச் சுத்தமாக்குவார் – "**துன்மார்க்கர் யாவரையும் அழிப்பார்.**" "**அவர்கள் இராதவர்களைப்போல் இருப்பார்கள்.**" "**துன்மார்க்கன் இரான்**" "**அழிந்து போவார்கள்**" "**புகைந்து போவார்கள்**" (சங். 145 : 20; 37 : 10, 20; ஒப. 16) அவர்கள் நித்திய ஆக்கினையை அடைவார்கள். [மத். 25 : 46 ஆக்கினையென்று மொழிபெயர்க்கப்பட்ட "கொலாசின்" என்ற கிரேக்க வார்த்தையானது அறுப்புண்டு போதல் வெட்டுண்டு போதல் என்று அர்த்தமுள்ளது; (முடிவற்ற) நித்திய வேதனையல்ல. ஜீவனின்றி நித்தியமாய் அழிந்து போகுதல், நித்திய மரணம் – முற்றிலும் பூரண, நித்திய அழிவாகிய "**இரண்டாம் மரணத்தை**" அடைவார்கள். ஏனெனில் "**பாவத்தின் சம்பளம் மரணம்**" (ரோம. 6 : 23)] ஆனால் இதற்குமாறாக "**நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள்.**" (மத். 25 : 46) – ஆனால் *பொய்களின் பிதா*, தேவனுடைய பரிசுத்த குண இலட்சணங்களை மறுத்துத் தள்ளி, தம்முடைய மனுஷ சிருஷ்டிகளில் கோடானு கோடிப் பேரைப் பேய்த்தனமாக, கொடூரமாகப் பழிவாங்கும் நோக்கமாய் நித்திய காலமாகச் சித்திரவதை செய்வார் என்று அவரை வர்ணித்துத் தூஷிக்கிறான், ஷியோல் என்ற எபிரெய வார்த்தையையும், ஹேட்ஸ், ஹெகன்னா என்ற கிரேக்க பதங்களையும் பெரும்பாலான மனுமக்கள் சித்திரவதை செய்யப்படுகிற இடம் என்ற தப்பான அர்த்தங்கொடுக்கத்தக்கதாகச் சாத்தான் பிழையாக மொழிபெயர்த்து அவற்றைத் தப்பிதமாகப் பிரயோகித்து, தப்பான உரை விளக்கங் கொடுத்திருக்கிறான்.

**ஜோதிகளின் பிதா,** அழிவை அறிகுறியாக அடையாளப்படுத்திக் காட்டுவதற்கு "**அக்கினியை**" உபயோகிக்கிறார். அப்படியே சோதோம் கொமோரா பட்டணத்தார்களும் (அவர்களின் முழு அழிவில்) – நித்திய அக்கினியின் ஆக்கினையை அடைந்து திருஷ்டாந்தமாக வைக்கப்பட்டிருக்கிறார்கள்) (யூதா 7) – அக்கினி நித்தியமாய் எரிகின்றது என்றல்ல. அது அவர்களை நித்தியமாய் அழித்துப்போட்டது. பட்டணங்களை, ஜனங்களையல்ல – அவர்கள் இரட்சிப்படைய அவர்களுக்கு எதிர்கால நல்வாய்ப்பிருக்கிறது. (எசே. 16 : 46–63; மத். 10 ; 15; லூக். 10 : 11, 12). எனவே, அக்கினி அழிவை உருவகமாகக் காட்டுகிறது. (ஏசா. 66 : 24; மாற். 9 : 43–48–ல் கூறப்பட்டிருக்கிறதிலுள்ளபடி புழுவும், நரகமும் அழிவைத்தான் குறிப்பிடுகின்றன. (மேற்கண்ட வாக்கியங்களில் வரும் நரகம் என்ற பதம் ஆதாமுக்குள் மரிக்கிற உணர்வற்ற நித்திரை நிலைமையைக் குறிக்கிற ஹேட்ஸ் (Hades) அல்ல உதவாப் பொருட்களை அழிக்கிற இடமாகிய இன்னோம் பள்ளத்தாக்கைக் குறிக்கும் 'கெஹென்னா' (Gehenna) என்ற கிரேக்க வார்த்தையானது, வெளி. 20 : 14, 15; 21 : 8–ல் கூறப்பட்டிருக்கிற அக்கினியும், கந்தகமும் எரிகிற கடலாகிய 'இரண்டாம் மரணத்தையே' குறிக்கிறது – ஜீவனையல்ல) – ஆனால், பொய்களின் பிதா அவனுடைய ஆதிப் பொய்யை ஆதரிப்பதற்காக அக்கினி (அழிவையல்ல) ஆனால் பத்திரப்படுத்துதலைக் குறிக்கிறதென்றும்; அக்கினிக்கடல் இரண்டாம் மரணமல்ல ஆனால் இரண்டாம் ஜீவன் என்றும்; நித்திய ஜீவன் என்பது அக்கினியால் பாதிக்கப்படாத பிசாசுகள் முதலியவற்றால், சொல்ல முடியாத அளவு வாதையில் துன்பப்படுவதாகும் எனப் போதிக்கிறான்.

**ஜோதிகளின் பிதா,** நித்திய அக்கினி (அழிவு) "**பிசாசுக்காகவும், அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிறது**" (மத்.25 : 41). அவன், அக்கினிக் கடலில் தள்ளப்படுவான். (இரண்டாம் மரணம் – முற்றிலும் பூரணமான நித்திய அழிவு) இரவும் பகலும் சதா காலங்களிலும் வாதிக்கப்படுவார்கள். [வாதிக்கப்படுவார்கள் என்ற வார்த்தை கிரேக்க மொழியில் 'பசானிசோ'. இவ்வார்த்தை முதலிற் 'சோதிக்க' என்ற அர்த்தமுடையது. (பின்பு சந்தேகப்பட்ட குற்றவாளி களைச் சோதிக்கும்பொழுது அவர்களை வாதிக்கிறதுண்டு. இவ்விரண்டாம் கருத்தையே இப்பொழுது தப்பிதமாக எடுத்துக் கொண்டார்கள்.) ஏசா. 14 : 16; 66 : 24 வசனங்களை ஒத்துப்பார்க்க. நீதிமான்கள் திருந்த முடியாத பொல்லாதவர்களின் போக்கு பற்றி நித்திய காலமாகச் 'சிந்திப்பார்கள்' வெளியே போய் உற்றுப் பார்ப்பார்கள்" அதாவது மனதிலே சிந்தனை செய்து, சோதித்து, பரிசீலனை பண்ணி அதன்பயனாகப் பிரிக்க முடியாதபடி பொல்லாதவர்கள் தீமையுடன் இணைக்கப் பட்டிருந்தால் அவர்கள் நியாயமாகவே அழிவுக்குத் தகுதியுள்ளவர்கள்தான் எனத் தீர்மானிப்பார்கள்] (வெளி. 20 : 10) "**மரணத்திற்கு அதிகாரியான பிசாசானவனைக் கிறிஸ்து அழிப்பார்**" என்றும் (எபி. 2 : 14) சாத்தான் லூசிபராக (வெளிச்சம் சுமக்கிறவன்) "**தேவனுடைய தோட்டமாகிய ஏதேனில் இருந்தான்**" – "**உன்னில் அநியாயம் கண்டுபிடிக்கப்பட்டது மட்டும் குறையற்றிருந்தாய்**" என்று கூறப்பட்டிருப்பவன் முழுவதும் நித்திய காலமாய் நாசமாக்கப்படுவான் – "**இனி ஒருபோதும் இருக்கமாட்டாய்**" (ஏசா. 14 : 17–20; எசே. 28 : 11–19) என்று கூறுகிறார். ஆனால் *பொய்களின் பிதாவோ*, அவனுடைய இறுதியான அழிவைப் பற்றிய தீர்க்கதரிசனங்களை நிச்சயமாகவே விரும்பாதபடியால் பின்கண்டவாறு வஞ்சிக்கிறான். **(1)** சிலரை ('கிறிஸ்தவ விஞ்ஞானிகள்' முதலியவர்களை)த்தான் ஒரு ஆள் அல்லவென்று மறுக்கவும், பொல்லாத வெறுங் கொள்கைகள் என்று உரிமை கொண்டாடவும், **(2)** வேறு சிலரை (சகல மனிதரும் இரட்சிக்கப்படுவார்களென்ற கொள்கையுடையவர்கள் முதலியவர்களை) "**அக்கினிக் கடல்**" என்பது சுத்தமாக்கிப் பத்திரப்படுத்துதல் என்பதைக் குறிக்கிறது – சகலரும் நித்திய ஜீவனையடைய இரட்சிக்கப்படுவார்கள் என்று நம்பவும் **(3)** மேலும் மற்றவரை தேவன் இல்லையென்றும், வேதாகமம் நம்பத்தகாதது, அது தேவ வெளிப்படுத்துதல் அல்லவென்று மறுக்கவும், செய்யும்படியாக வஞ்சிக்கிறான்.

இவ்வாறாக, "**அன்பாயிருக்கிற**" (1 யோவா. 4 : 8) தேவனாகிய ஜோதிகளின் பிதாவிடம் கடைசியில் சுத்தமான பிரபஞ்சம் இருக்கும். பொல்லாதவர்கள் அனைவரும் அழிக்கப்பட்டு பொல்லாங்கு என்றென்றும் செயல்படாது ஓய்ந்துபோம் – "**நியாயக்கேடெல்லாம் தன் வாயை மூடும்.**" (சங். 107 : 42). அப்பொழுது வானத்திலும் பூமியிலுமுள்ள சர்வ சிருஷ்டியும் தேவனையும் கிறிஸ்துவையும் துதித்து, "**சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும், ஆட்டுக்குட்டியான வருக்கும், ஸ்தோத்திரமும், கனமும், மகிமையும், வல்லமையும் சதா காலங்களிலும் உண்டாவதாக**" என்று பாடுகிற மாபெரும் நித்திய கீர்த்தனையைச் சேர்ந்து பாடுவார்கள். (வெளி. 5 : 13, 14). ***

Visit us at : **www.biblestandardindia.com**

***For English Magazines, Volumes & Translated Tracts, Booklets & Tamil Magazines Contact :***

**Laymen's Home Missionary Movement**

32-D, Dr.Solomon Compound, Near Railway Gate, Nazareth - 628 617
Thoothukudi District, Tamil Nadu, India.
E-mail ID : vincent.v31@gmail.com
Cell : 98949 26629

**FOR PRIVATE CIRCULATION ONLY**